தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

206

International Journal of Tamil Language and Literary Studies

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021

UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

# புறநானூற்றில் பண்டைய தமிழ்ச் சமூகத்தின் சமயச் சூழல்

## Religious Context of the Ancient Tamil Community in "Purananooru"

**மு.சரண்யா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.
**M. Saranya,** Ph.D Scholar, Department of Tamil, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi.
ORCiD: https://orcid.org/0000-0002-6703-0621

**முனைவர் பே. மஹேஸ்வரி,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.
**Dr P.Maheshwari,** Associate Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi.
ORCiD: https://orcid.org/0000-0002-2195-9224
**DOI: 10.38067/ijtlls.2021.spl.v03i03v2.031**

### Abstract

*Religion was a small part of the social life of the Sangakala people. It can be said that religions do not even fill the place of love and heroism which is revered as the two eyes of the ancient Tamils. However, there were also some basic tenets for the formation of religions in those days. But it should be considered as the starting point for the emergence of religions and the stage of development. At the same time, the Sangam songs make it clear that the people who lived in ancient Tamil Nadu did not accept a particular religion by the king or emperor and live according to its norms and that they have been living the indigenous life spontaneously in the religion. Moreover, the great poets in their songs put forward the idea that no king can live or exaggerate any one religion and oppress the other. The article thus sets out to explore and describe the place of religion in the lives of people in the "Purananooru"*

**Keywords:** "Purananooru", Ancient, Community, Religious, Context.

### முன்னுரை

சங்ககால மக்களின் சமூக வாழ்க்கையில் சமயமானது ஒரு சிறு அங்கமாகவே இடம் பெற்றிருந்தது. பண்டைத் தமிழரின் இரு கண்களாகப் போற்றப்படுகின்ற காதலும் வீரமும் பெற்ற இடத்தைக்கூட சமயங்கள் நிரப்பவில்லை என்றே கூறலாம். இருப்பினும் அக்காலத்தில் சமயங்கள் உருவாக சில அடிப்படையான கோட்பாடுகளும் இருந்துள்ளன. ஆனால் அது சமயங்கள் தோற்றம் கொள்ளவும் வளர்ச்சி நிலையை அடைவதற்குமான ஆரம்பப்புள்ளி என்று நாம் கொள்ள வேண்டும். அதே சமயம், பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் அரசனாலோ, மன்னனாலோ ஒரு குறிப்பிட்ட சமயத்தை ஏற்றுக்கொண்டு அதன் நெறிகளுக்கு உட்பட்டு வாழவில்லை என்பதையும் அவர்கள் சமயத்தைத் தேர்ந்தெடுப்பதில் தன்னிச்சையாக முடிவெடுத்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையும் சங்கப்பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. அவ்வகையில் புறநானூற்றுக் கால மக்களின் வாழ்க்கைச்சூழலில் சமயம் பெறுமிடத்தை ஆராய்வதாகவும் அவற்றை விவரிப்பதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021

UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**சமயம் என்பதன் பொருள்**

சமயத்திற்கு இணையான ஆங்கில மொழிச்சொல் **'Religion'** என்பதாகும். இது **'Re - ligare'** என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்தது என்பர். அச்சொல்லிற்கு **'மறுபடியும் கட்டுப்படுத்தல்'** என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

**தொல்காப்பியத்தில் சமய நிலை**

சங்க இலக்கியத்தாலும் தொல் பொருள் சான்றாலும் சங்க காலத்தின் சமயநிலையினை அறிந்து கொள்ள முடிகின்றது. சங்க மக்கள் தாம் வாழ்ந்து கொண்டிருந்த நிலங்களுக்கு ஏற்ப அதன் தன்மைகளைக் கொண்டு பாகுபடுத்தியும் உருவாக்கியும் வழிபட்டு வந்துள்ளனர் என்பதை விளக்கும் வகையில் தொல்காப்பிய நூற்பா அமைகின்றது. பொருளதிகாரச் செய்யுளியலில் கருப்பொருளைப் பற்றிக் கூறும் வேளையில் அந்தந்த திணைக்குரிய தெய்வத்தையும் எடுத்துரைத்துள்ளார். இதனை,

**மாயோன் மேயக் காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேயத் தீம்புனல் உலகமும்**
**வருணன் மேயப் பெருமணல் உலகமும் (தொல், பொருள், அகத்,நூ.5)**

என்னும் நூற்பாவின் பொருட்டு அறிய முடிகின்றது. நில அடிப்படையில் தெய்வங்களை தொல்காப்பியர் குறிப்பிட்டதை நோக்குகையில் அவர் காலங்களில் சமயங்கள் கடவுள் பெயரால் இருந்துள்ளன என்பது தெரியவருகின்றது.

**புறநானூற்றில் சமய நிலை**

தமிழ்ப் பண்பாட்டை அறுதியிட்டுக் கூறும் புறநானூற்றில் சமயம் என்ற சொல்லாட்சி உண்டா? அல்லது சமயம் தான் உண்டா? உண்டென்றால் அது எந்தச் சமயத்தை குறிப்பிடுகின்றது? என்ற ஐயம் அனைவருக்கும் இருக்கத்தான் செய்கின்றது. இக்காலத்தில் இந்து மதங்களின் பிரிவுகளைப் போன்று புறநானூற்றில் பல தெய்வ வழிபாட்டு முறைகளும் இருந்திருக்கின்றன. சமயங்கள் இருந்தன என்று கூறிவிட முடியாது. ஆனால் இன்றைய சமயத்தார்கள் மேற்கொள்ளும் வழிபாட்டு முறைகள் அன்றும் இருந்தன என்பது திண்ணம். புறநானூற்றில் சிவன், முருகன், பலதேவன், திருமால், கொற்றவை குறித்த பதிவுகளும் இந்திரன், கூற்றுவன் குறித்த பதிவுகளும் காணக்கிடைக்கின்றன. அவற்றுடன் இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, முன்னோர் வழிபாடு குறித்த தரவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், சில இடங்களில் கடவுளைப் பற்றிக் குறிப்பிடாது அவர்களின் தன்மைகளையும், உருவ அமைப்பையும் அவர்களது சிறப்புகளையும் புலவர்கள் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

**கடவுளும் சமயமும்**

புறநானூற்றில் இடம்பெறுகின்ற கடவுள்களில் பெரும்பாலோனோர் ஆண் கடவுள்களே என்பது குறிப்பிடத்தக்கது. பெண் கடவுள்களில் கொற்றவையை மட்டுமே

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021

UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. வீரர்கள் போரிற்குப் புறப்படும் முன் கொற்றவையை வழிபட்டுள்ளனர் என்பதும் தெரிய வருகின்றது.

**சிவன் (சைவம்)**

புறநானூற்றில் சிவனைப் பற்றிய குறிப்புகள் பரவலாகக் காணப்பட்டாலும் **'சிவன்'** என்ற சொல்லாட்சி எங்கும் பதிவு செய்யப்பெறவில்லை. அதே சமயம், பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவனை முழுமுதற் கடவுளாக எண்ணியும் அவரை முன்னிறுத்தியும் **"கார்விரி கொன்றை பொன்னேர் புதுமலர்"** எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப்பாடலைப் பாடியுள்ளார். மேலும் புறநானூற்றில் பயின்றுவரும் முக்கட் செல்வர், ஆலமர் செல்வன் போன்ற சொற்றொடர்கள் சிவனையே குறிக்கின்றன என்பதை,

**புனியியரத்தை நின்குடையே முனிவா**

**முக்கட் செல்வர் நகர் வலஞ்செயற்கே (புறம், பா.6, வரி.17-18)**

**கறை மிடற்று அண்ணால் (மேலது, பா.55, வரி.4)**

என்ற புறப்பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. சிலப்பதிகாரத்திலும் சிவனின் கோயிலை இளங்கோவடிகள் **'பிறவா யாக்கைப் பெரியோன்'** என்றே பதிவு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**முருகன் (சைவம்)**

சங்க அக இலக்கியங்களைப் போலவே புறநானூற்றிலும் முருகன் குறித்த பதிவுகள் காணக்கிடைக்கின்றன. **'சேய், முருகன், முருகு, நெடுவேள், கடவுள்'** என்னும் அடைமொழிகளோடு முருகனைக் குறித்த பதிவுகள் புறநானூற்றில் பயணிக்கின்றன. அன்பின் ஐந்திணைகளில் பெரும்பாலும் குறிஞ்சித் திணையிலே முருகன் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம் இவர் என்பதை, "சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல்,பொருள்,அகத்,நூ.5) தொல்காப்பியரும் எடுத்தியம்புகின்றார். முருகனின் மாலை கடம்ப மாலை என்பதை,

**கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்**

**சூர் நவை முருகன் சுற்றத்து அன்ன (புறம், பா.23, வரி.3-4)**

கல்லாடனார் பாடலின் வழி தெளிவுறுத்துகின்றார். இது தவிர்த்து புறம் - 14, 16, 23, 55, 56, 120, 125, 158, 259, 299 ஆகிய பாடல்களில் முருகன் குறித்த பதிவுகள் இடம்பெறுகின்றன.

**திருமால் (வைணவம்)**

**'மால்'** என்ற சொல்லானது பின்னாளில் **'திரு'** என்ற சிறப்புப் பெயரைப் பெற்று **'திருமால்'** என அழைக்கப்பட்டது. இவர் **'கண்ணன்'** எனவும் அழைக்கப்பெறுவார். தமிழ் இலக்கியங்களும் திருமாலை **'மாயோன்'** என்றே குறிப்பிடுகின்றன. முல்லை நிலத்திற்குரிய தெய்வம் இவர் என்பதை, *"மாயோன் மேயக் காடுறை உலகமும்" (தொல்,பொருள்,அகத்,நூ.5)*

தொல்காப்பியரும் எடுத்தியம்புகின்றார். அதோடு மட்டுமல்லாது **'பூவை நிலை'**யிலும் குறிப்பிடுகின்றார்.

**பால் நிற உருவின் பனைக் கொடியேனும்**

**நீர் நிற உருவின் நேமியோனும் (புறம்,பா.58,வரி.14-15)**

என பால்நிறமுடைய பலதேவனையும், நீல நிறமுடைய கண்ணனையும் இணைத்து இருபெரும் வேந்தரை வாழ்த்துவதாக புறநானூற்றுப்பாடல் ஒன்று அமைகின்றது. இது தவிர்த்து புறம் - 174, 198, ,378, ,56 ஆகிய பாடல்களில் திருமால் குறித்த பதிவுகள் இடம் பெறுகின்றன.

**வடக்கிருத்தல் (சமணம்)**

பண்டைய மறத்தமிழர்களிடையே வடக்கிருத்தலானது ஒரு பண்பாகவே போற்றப்பட்டு வந்தது. இதனை ஆடவர்கள் பெரும்பான்மையோர் மேற்கொள்வர். வடக்குத் திசை நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் விடுதலே வடக்கிருத்தலாகும். போர் புரியும் பொழுது முதுகிலே புண்பட்ட வீரர்கள் அதற்கு நாணி வடக்கிருந்து உயிர்த்துறப்பர் என்பதை,

**புறப்புண் நாணி, மறத் தகை மன்னன்**

**வாள் வடக்கிருந்தனன் (மேலது,பா.65.வரி.10-11)**

என்னும் பொதுவியல் திணைப்பாடலின் வழி கழாத்தலையார் வடக்கிருத்தலின் காரணத்தைச் சுட்டுகின்றார். வடக்கிருந்து உயிர் நீப்பவர் **'மறு பிறவியில் மன்னராகப் பிறப்பர்'** என்று சிறுபஞ்சமூலம் கூறுகின்றது.

நோன்புமுறை (வடக்கிருத்தல்) சமணர்களுக்குரியது என்று அறிஞர் சிலர் வாதமும் செய்கின்றனர். சமணத்தில் இதனைச் **'சல்லேகணை'** என்று கூறப்படுகின்றது. மேலும், சமண மதத்தில் இந்நோன்புமுறை ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானதாகவும், அவர்கள் வீடுபேறு பெறுவதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்கண்ட ஆய்வின் வழி புறநானூற்றில் பலதரப்பட்ட சமயம் சார்ந்த பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குமுறைகளென யாவும் அக்காலத்தில் இருந்துள்ளன. இருப்பினும், அவையாவும் சமயம் என்பதை முன்மொழியவோ வரையறுக்கவோ இல்லை என்பது புலனாகின்றது. ஆக, அன்று பல கடவுள்களை வழிபட்ட சூழல் உண்டென்றாலும் மக்களும் மன்னர்களும் எவ்வித சமயச்சார்பும் இன்றி ஒற்றுமையாய் வாழ்ந்துள்ளனர் என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகின்றது.

**பார்வை நூல்கள்**

[1] சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு, அரசு, சமூகம்), அ.பாண்டுரங்கன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதல் பதிப்பு - ஜூலை 2016.

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 3, Vol.2, January 2021
Available at: www.ijtlls.com

[2] சங்க கால வாழ்வியல், நா.சுப்பிரமண்யன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதல் பதிப்பு - ஆகஸ்டு 1986.

[3] சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன், பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2014

[4] பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (மூலமும் உரையும்), எஸ்.கௌஸ்மாரீஸ்வரி, சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - மார்ச் 2009.

[5] தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், கே.கே.பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதின்மூன்றாம் பதிப்பு - 2017.

[5] தமிழக வரலாறும் பண்பாடும், வே.தி. செல்லம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - ஆகஸ்டு 2000.

[6] தமிழர் சமூக வாழ்வு, ம. இளங்கோவன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2016.

[7] தொல்காப்பியப் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

[8] பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, தா.ஈசுவரப்பிள்ளை, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு - நவம்பர் 2002.

[9] பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ராஜ் கௌதமன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதல் பதிப்பு - டிசம்பர் 2018.

[10] புறநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2017.

**தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:**

**சரண்யா & மஹேஸ்வரி . "புறநானூற்றில் பண்டைய தமிழ்ச் சமூகத்தின் சமயச் சூழல்."** *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் - 3, தொகுதி 2, ஜனவரி 2021, பக்.206-210.

**டிஓஐ: 10.38067/ijtlls.2021.spl.v03i03v2.031**

**Cite this Article in English (MLA 8 Style) as:**

**Saranya & Maheshwari. "Religious Context of the Ancient Tamil Community in "Purananooru"."** *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 3, Vol. 2, January 2021, pp.206-210. **DOI: 10.38067/ijtlls.2021.spl.v03i03v2.031**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement:** இல்லை /NIL

**கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement:** இல்லை /Nil

**கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். /I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.